ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2213/34 - 2021 පෙබරවාරි මස 03 වැනි බදාදා - 2021.02.03
*2213/34 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 10/2017* (III)

**2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின்கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

கொழும்பு,
*2021,* பெப்புருவரி *03.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்கு விதிகள் 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் இலங்கைக்கு வெளியே பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல் வாங்கல்களின் வகுப்புகள்) பற்றிய ஒழுங்கு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2021, மாச்சு 22 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தொழிற்படுத்தப்படல் வேண்டும்.

2. இலங்கையில் வதிபவரும் இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவருமான ஆளொருவரினால் இலங்கைக்கு வெளியே பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள், இவ்வொழுங்குவிதிகளிலும் இதற்கான அட்டவணையிலும் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைகள், நியதிகள், நிபந்தனைகள் என்பவற்றுக்கமைய, சட்டத்தின் 4 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினால் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினால் நிறைவேற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல் வாங்கல்களின் அதிகாரமளிக்கப்பட்ட வகுப்புகளாதல் வேண்டும்.

1A - PG 5298 — 450 (2021/02)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச்செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதில், ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் அதற்கென வழங்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

4. (1) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் அதற்கென ஆவணமுறையான சான்றைப் பெற்றுக்கொள்வதன்மூலம் பின்வருவனவற்றை நிச்சயித்தல் வேண்டும்:-

(அ) கொடுக்கல்வாங்கலை நிறைவேற்றுகின்ற ஆளின் நல்லெண்ணம்; அத்துடன்

(ஆ) அத்தகைய கொடுக்கல்வாங்கல் இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்கி யொழுகவுள்ளதென்று.

(2) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டுள்ள ஒவ்வோராளும், (1) ஆம் பந்தியின் நோக்கத்துக்காக அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு அவசியமான எல்லா ஆவணமுறையான சான்றையும் வழங்குதல் வேண்டும்.

(3) ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியிலான அத்தகைய மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதில் உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும்.

5. மத்திய வங்கியானது, இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி, மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி அல்லது ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியாகவிராத வேறெவரேனுமாள் தொடர்பில் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அது அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம்.

6. (1) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காகப் "பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்" என்பது, பின்வருவன என்று பொருளாகும்:-

(அ) ஐக்கிய அமெரிக்க டொலர் (ஐஅடொ);
(ஆ) யூரோ;
(இ) ஸ்டேர்லிங் பவுண்;
(ஈ) அவுஸ்திரேலிய டொலர்;
(உ) சிங்கப்பூர் டொலர்;
(ஊ) சுவீடன் குரோனர்;
(எ) சுவிஸ் பிரான்க்;
(ஏ) கனேடிய டொலர்;
(ஐ) ஹொங்கொங் டொலர்;
(ஒ) யப்பானிய யென்;
(ஓ) டென்மார்க் குரோனர்;
(ஔ) நோர்வே குரோனர்;
(க) சீன ரென்மின்பி; அத்துடன்
(ங) நியூசீலாந்து டொலர்.

(2) மத்திய வங்கியானது, காலத்துக்குக்காலம், சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் அதற்கென வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம், (1)ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களைத் திருத்தலாம், மாற்றலாம் அல்லது அவற்றுக்கு எதனையும் சேர்க்கலாம்.

7. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டவையும் 2017, நவம்பர் 17 ஆந் திகதிய 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையுமான 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளினால் கொண்டுநடாத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகள், அவற்றின்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இத்தால் ஒழிக்கப்படுகின்றன:

ஆயின், எவ்வாறாயினும், மேற்கூறப்பட்ட ஒழுங்குவிதிகள் ஒழிக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், அதன் செல்லுபடிக் காலப்பகுதி 2020, திசெம்பர் 18 ஆந் திகதிய 2206/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் நீடிக்கப்பட்டதும், மற்றும் 2020, யூலை 2 ஆந் திகதிய 2182/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையானது, அவ்வாறு நீடிக்கப்பட்ட காலப்பகுதியின்போது பயனுறுதல் வேண்டும்.

8. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக-

''சட்டம்'' என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்று பொருளாகும்;

''அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி'' என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

''மூலதனக் கொடுக்கல்வாங்கல்'' என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

''மத்திய வங்கி'' என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

''கொழும்புப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை'' என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டதும் அத்துடன் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றாகத் தொழிற்படுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்டதுமான கொழும்புப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை எனப் பொருள்படும்;

''உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனிகள்'' என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

''தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர்'' என்பது, இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் I இன் 3 ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்டவை தவிர, இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் I இன் 2 ஆம் பந்தியின் 1 ஆம் பட்டியலின் 1 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டவாறு தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர் எனப் பொருள்படும்;

''குடியகல்பவர்'' என்பது, 2021, பெப்புருவரி 3 ஆந் திகதிய 2213/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (குடியகல்வோரினால் நிதிகளின் அனுப்புதொகை) ஒழுங்குவிதிகளிலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டம் அல்லது ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செய்திட்டம்'' என்பது, இலங்கையில் அதனது கிளையினை அல்லது துணைநிலைக் கம்பெனியினைச் சேர்ந்த ஊழியர்களுக்கு இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்று எந்தத் திட்டம் அல்லது செய்திட்டத்தின்கீழ் அதனது பங்குகளை அல்லது கம்பெனிகள் தொகுதியின் பங்குகளைக் கொள்ளுதல்செய்வதற்குச் சந்தர்ப்பம் ஒன்றை வழங்குகின்றதோ அந்தத் திட்டம் அல்லது செய்திட்டம் எனப் பொருள்படும்;

''கிட்டிய குடும்பவுறுப்பினர்கள்'' என்பது, இயைபான ஆளின் பெற்றோர், வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைகள் என்று பொருளாகும்;

''இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு'' என்பது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு என்று பொருளாகும்;

''உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி'' என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

*“உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி”* என்பது, *2017* ஆம் ஆண்டின் *12* ஆம் இலக்க,வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

*“பணச்சபை”* என்பது, *2017* ஆம் ஆண்டின் *12* ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

*“கடல்கடந்த கம்பெனி”* என்பது, *2007* ஆம் ஆண்டின் *7* ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

*“நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்”* என்பது, (*423* ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்று பொருளாகும்;

*“மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி”* என்பது, *2017* ஆம் ஆண்டின் *12* ஆம் இலக்க,வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக்

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர்* | *அனுமதிக்கப்பட்ட வரையறைகள்* | *முதலீட்டின் வகை* |
| (ii) கொழும்புப் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையில் நிரற்படுத்தப் படாத கம்பெனி ஒன்று | ஒரு பஞ்சாங்க ஆண்டிற்கு 500,000 ஐஅடொ அல்லது பெயர்குறிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. | |
| (iii) மத்திய வங்கி அல்லது இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அல்லது இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் கீழ் (மேலே (i) மற்றும் (ii) இன் கீழ் தகவுடைய முதலீட்டாளர்களைத் தவிர்த்து) ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லது உரிமமளிக்கப்பட்ட உருவகங்கள் | ஒரு பஞ்சாங்க ஆண்டிற்கு 500,000 ஐஅடொ அல்லது பெயர்குறிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. | |
| (iv) 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியம் அல்லது தொழில் ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக் கப்பட்ட வேறேதேனும் சகாய நிதியம் | ஒரு பஞ்சாங்க ஆண்டிற்கு 500,000 ஐஅடொ அல்லது பெயர்குறிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. | |
| (v) இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பங்காண்மை ஒன்று | ஆயுட் காலத்துக்காக 300,000 ஐஅடொ அல்லது பெயர்குறிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. | |
| (vi) தனியாள் ஒருவர் அல்லது அத்தகைய தனியாளின் தனியுரிமையாண்மை (கூட்டுமொத்தத்தில்) | ஆயுட் காலத்துக்காக 200,000 ஐஅடொ அல்லது பெயர்குறிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை | |
| (vii) கம்பெனி ஒன்று அல்லது பங்காண்மை ஒன்று | ஒரு பஞ்சாங்க ஆண்டிற்கு 300,000 ஐஅடொ அல்லது பெயர்குறிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. | கடல்கடந்த அலுவலகங்கள் |
| (viii) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகள் | ஒரு பஞ்சாங்க ஆண்டிற்கு 500,000 ஐஅடொ அல்லது பெயர்குறிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. | கிளையலுவலகங்கள் |
| எவையேனும் வரையறைகளுக்கு அமையவிராமல் அனுமதிக்கப்பட்ட முதலீடுகள் | | |
| (ix) தனியாள் ஒருவர் | ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்தின் அல்லது ஊழியர் பங்குவிருப்புத் தெரிவுச் செய்திட்டத்தின் திட்டவிளக்க அறிவிப்பிலுள்ள தொகைவரை | ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்தின் அல்லது ஊழியர் பங்குவிருப்புத் தெரிவுச் செய்திட்டத்தின் பங்குகளில் முதலீடுசெய்தல் |
| (x) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளும் (முதலீடானது கடல் கடந்த நாடுகளில் வங்கித்தொழில் தொழிற்பாட்டில் இருந்தால் மட்டும்) | முதலீடுபெறும் நாட்டில் ஒழுங்குபடுத்து நரினால் விதிக்கப்பட்ட வரையறைவரை | ஒரு துணைநிலைக் கம்பெனியின் பங்குகளில் முதலீடு செய்தல் அல்லது ஒரு கிளையலுவலகத்தில் முதலீடு செய்தல் |

(2) மேலே பட்டியல் 1 இல் குறித்துரைக்கப்பட்ட முதலீடுகளுக்கான கூட்டுமொத்த வரையறைகள், இவ்வொழுங்குவிதிகளின்கீழ் செய்யப்பட்ட கூட்டுமொத்த முதலீடுகளையும், நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் நியதிகளின்படியும் 2017ஆம் ஆண்டு நவெம்பர் 17 ஆந் தேதிய 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளினால் கொண்டுநடாத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகளின் மூலமும் வழங்கப்பட்டதும் 1686/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையின்கீழும் 2011 ஆம் ஆண்டு சனவரி 1 ஆந் தேதிய 1686/52 மற்றும் 1686/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களின்கீழும் அளிக்கப்பட்ட பொது அனுமதியின் நியதிகளின்படி முன்னர் செய்யப்பட்ட ஏதேனும் வெளித்திரும்பல் கொடுப்பனவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

3. வலிந்துதவும் சமூகசேவைகள் ஒழுங்கமைப்புகள், உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்று மற்றும் நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் ஏதேனும் துடர்ச்சி, வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை அல்லது சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி இலங்கையில் வதிகின்ற எவ்வாளுக்கெதிராகக் குற்றவழக்கு, புலனாய்வுகள் அல்லது ஏதேனும் அறவிடுதல் வழக்கு முடிவுறாதுள்ளனவோ அத்தகைய ஆள் ஒருவர் அட்டவணையின் இப்பாகத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட நோக்கங்களுக்காக மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்குத் தகவுடையனவாதலாகாது அல்லது தகவுடையவராதலாகாது.

4. அட்டவணையின் இப்பாகத்தின் 1 ஆம் பந்தியின்கீழ் முதலீடுசெய்த எவரேனும் தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர், அட்டவணையின் இப்பாகத்தின் 2 ஆம் பந்தியின் பட்டியல் 1 இல் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளைப் பொருட்படுத்தாது, வழங்குநரினாலான கூட்டிணைப்பு நடவடிக்கையின் பயனைக்கொண்டு அல்லது இவ்வொழுங்குவிதிகளின் கீழ் கொள்ளப்பட்ட முந்துரிமைப் பங்குகளை அல்லது கடன்தொகுதிப்பத்திரங்களை அல்லது கூட்டிணைப்பு முறிகளை மாற்றுதல் என்ற வகையாக, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகளின் ஒன்றிணைவுகள் அல்லது ஒன்றுசேர்க்கைகளின் நியதிகளின்படி பெறப்பட்ட பங்குகள் என்ற வகையாக, அத்தகைய முதலீட்டாளரை வந்தடைகின்ற பங்குகளைக் கொள்ளுதல்செய்து வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றார்.

5. எவ்விதப் பிரதிபயனுக்காகவுமன்றி கடல்கடந்த நாடுகளில் சொத்துக்களின் அல்லது முதலீடுகளின் கொள்ளுகைகள்

(1) இலங்கையில் வதிவுள்ள எவரேனுமாள், வெளிநாட்டுச் செலாவணியில் அல்லது இலங்கை ரூபாக்களில் அல்லது சொத்துக்கள் என்ற வடிவத்தில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பெனியிடமிருந்து அல்லது இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனுமாளிடமிருந்து வருமதியாகவுள்ள ஏதேனும் பெறப்படற்பாலதன் பரிமாற்றாகப் பிரதிபயனெதுவும் செலுத்தப்படவேண்டியிராதவிடத்து கடல்கடந்த நாடுகளில் ஏதேனும் சொத்தை அல்லது முதலீட்டைக் கொள்ளுதல்செய்து வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றார்.

(2) வழங்குநரினாலான கூட்டிணைப்பு நடவடிக்கையின் பயனைக்கொண்டு அல்லது இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகளின் ஒன்றிணைவுகளின் அல்லது ஒன்றுசேர்க்கைகளின் நியதிகளின்படி ஊக்குவிப்பாளர் பங்குகளாக அல்லது தங்கப் பங்குகளாக மற்றும் அத்தகைய முதலீட்டாளர்களைச் சென்றடைகின்ற அடுத்துப்பின்னரான பங்குகளாக இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிவுள்ள ஆளொருவரினால் தனிப்பட்ட முதலீட்டாளரொருவருக்கு மரபுரிமைப்பெறுகையாக அல்லது கொடைகள் என்றவகையாக, ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்தின்கீழ் அல்லது ஊழியர் பங்குவிருப்புத்தெரிவுச் செய்திட்டத்தின்கீழ் எவ்விதப் பிரதிபயனுக்காகவும் அன்றிப் பெறப்பட்ட பங்குகளை மேலேயுள்ளவை உள்ளடக்கலாம்.

(3) அத்தகைய கொள்ளுகைகள், அட்டவணையின் இப்பாகத்தின் 2 ஆம் பந்தியின் பட்டியல் I இல் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைந்தனவாகவிருத்தலாகாது.

6. ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்திலான அல்லது ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செய்திட்டத்திலான முதலீடுகள்

(1) அதன் ஊழியர்களின் சார்பில் இலங்கையில் தாபிக்கப்பட்ட துணைநிலைக் கம்பெனியிடமிருந்து அல்லது கிளையிலிருந்து ஒருதடவையிலான அனுப்புதொகை ஒன்றின் அடிப்படைமீது அத்தகைய கடல்கடந்த கம்பெனிக்குப் பிரதிபயன் என்றவகையாக வெளித்திரும்பல் அனுப்புதொகை ஒன்றைச் செய்வதற்கு

ஏதேனும் தேவைப்பாடு இருப்பின், அத்தகைய நிதிக் கைமாற்றல்கள், கொடுக்கல்வாங்கலின் நல்லெண்ணம் பற்றித் திருப்திப்படுவதன்மேல் ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினூடாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினூடாக இலங்கையில் தாபிக்கப்பட்ட அத்தகைய துணைநிலைக் கம்பெனியின் அல்லது கிளையின் கணக்கொன்றிலிருந்து பயனுறுத்தப்படலாம்.

(2) அதன் ஊழியர்கள் சார்பில் அத்தகைய ஒரு தடவையிலான அனுப்புதொகையை அல்லது அனுப்புதொகைகளைச் செய்வதற்கு உட்கருதுகின்றதும் இலங்கையில் தாபிக்கப்பட்டதுமான துணைநிலைக் கம்பெனி அல்லது கிளை, இவ்வொழுங்கு விதிகளின் கீழ் நிதிகளை அனுப்பு முன்னர் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தலைவரிடமிருந்து ஒவ்வோர் ஊழியர் சார்பிலும் அனுமதிப்புக் கடிதமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அனுப்புதொகையைப் பயனுறுத்துகின்ற திகதியிலிருந்து ஒருவாரத்தினுள் அத்தகைய அனுப்புதொகை பற்றிய விபரங்களை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்துக்கு வழங்குதலும் வேண்டும்.

7. முதலீடுகளின் வருமானத்தை அல்லது கையுதிர்ப்பு அல்லது ஒழித்துக்கட்டுகையின் வரும்படிகளை இலங்கையினுள் திருப்பியனுப்புதல்

(1) அட்டவணையின் இப்பாகத்தின் 1, 2 மற்றும் 4 ஆகிய பந்திகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட அத்தகைய முதலீடுகளின் ஏதேனும் வருமானம் மற்றும் எவையேனும் மூலதன வரும்படிகள், அத்தகைய பெறுகைத் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள், ஆரம்ப முதலீடு எந்த வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்டதோ அதே வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாக இலங்கையினுள் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

(2) ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செய்திட்டத்தின் அல்லது ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்தின் நியதிகளின்படி, பங்கிலாபங்களைத் திருப்பியனுப்புவதற்கான தேவைப்பாடு, அதன்மூலம் அத்தகைய ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செய்திட்டத்தின் கீழ் அல்லது ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்தின்கீழ் பங்கிலாபங்கள் பங்குகளில் மீள்முதலீடு செய்யப்படுகின்ற ஏதேனும் பணிப்பாணைமுறையிலான அல்லது விருப்புத்தெரிவு முறையிலான தேவைப்பாட்டுக்கு அமையவிருக்கலாம். அட்டவணையின் இப்பாகத்தின் 6 ஆம் பந்தியின் (1) ஆம் உப்பந்தியின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறு ஊழியர் பங்கு விருப்புத்தெரிவுச் செய்திட்டத்தின்கீழ் அல்லது ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்தின்கீழ் முதலீட்டுக்காக அதன் ஊழியர்களின் சார்பில் ஒரு தடவையிலான அனுப்புதொகையாக/ அனுப்புதொகைகளாக உள்ள நிதிகளை அனுப்பியுள்ள இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியின்/ கிளையின் விடயத்தில், அத்தகைய தனிப்பட்ட ஊழியர்கள், ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியுடன் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியுடன் அத்தகைய தனிப்பட்ட முதலீட்டாளர்களினால் திறக்கப்பட்ட வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாக அத்தகைய முதலீடுகளின் ஏதேனும் வருமானத்தையும் கையுதிர்ப்பின் வரும்படிகளையும் இலங்கையினுள் கொண்டுவருதல் வேண்டும்.

(3) ஏற்புடையவாறாக அட்டவணையின் இப்பாகத்தின் 5 ஆம் பந்தியின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறு கொள்ளுதல் செய்யப்பட்ட கடல்கடந்த நாடுகளிலான ஏதேனும் சொத்தின் அல்லது முதலீட்டின் ஏதேனும் வருமானத்தையும் கையுதிர்ப்பின் எவையேனும் வரும்படிகளையும் பெறுகின்ற விடயத்தில், அவை அத்தகைய பெறுகைகளின் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள், அட்டவணையின் இப்பாகத்தின் 8 ஆம் பந்தியின் (1) ஆம் உப்பந்திக்கும் அட்டவணையின் இப்பாகத்திற் குறித்துரைக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளுக்கும் அமைய, ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியுடன் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியுடன் திறக்கப்பட்ட அத்தகைய வதிவுள்ள முதலீட்டாளரின் வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாக அல்லது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கினூடாக அல்லது ஏலவேயுள்ள வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கினூடாக இலங்கையினுள் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

8. வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாகச் செய்யப்பட்ட முதலீடுகளை மரபுரிமையாகப் பெறுதல்:

(1) அட்டவணையின் இப்பாகத்தின் 5 ஆம் பந்தியின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறு, இலங்கையில் வதிகின்ற தனிப்பட்ட ஆளொருவரினால் வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாகச் செய்யப்பட்ட முதலீடு, ஒரு மரபுரிமையாளராக அல்லது பயனுகரியாகவுள்ள ஆளொருவரினால் இலங்கையில் வதிகின்ற ஆளொருவருக்கு மரபுரிமையாகப் பெறப்பட்டுள்ள அல்லது அவருக்குக் கொடையளிக்கப்பட்டுள்ள விடயத்தில், அத்தகைய முதலீடுகளின் ஏதேனும் வருமானம் அல்லது மூலதன வரும்படிகள், அத்தகைய மரபுரிமையாளரினால் அல்லது பயனுகரியினால் திறக்கப்பட்ட வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக இலங்கையினுள் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

(2) ஒரு வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாக இலங்கையில் வதிகின்ற தனியாளொருவரினாற் செய்யப்பட்ட முதலீடொன்று, ஏற்புடையனவான மரபுரிமை மற்றும் அடுத்துறுகைச் சட்டங்களுக்கமைய, இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவருக்குக் கைமாற்றப்படலாம்.

9. குடியகல்பவராக வருகின்ற வதிவுள்ள தனிப்பட்ட முதலீட்டாளரொருவரின் விடயத்தில், சொல்லப்பட்ட தனியாள் இலங்கையில் வதிபவராகவிருக்கையில் ஒரு வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாக நிரந்தர வதிவுரிமையைப் பெற்றுள்ள நாட்டில் அத்தகைய குடியகல்பவரினால் செய்யப்பட்ட ஏதேனும் முதலீட்டின் மொத்தப் பெறுமதி, அத்தகைய தனியாளின் தகவுடைய புலம்பெயர் படியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

10. வதிவுள்ள முதலீட்டாளர்களுக்கான ஊக்குவிப்புகள்:

அட்டவணையின் இப்பாகத்தின் 2 ஆம் பந்தியின் பட்டியல் I இல் குறித்துரைக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைந்தவராகவிராது, வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்கு வரவு வைக்கப்பட்ட முன்னைய வெளித்திரும்பல் முதலீடுகளின் மூலதன ஈட்டுகைகளின் பெறுமதியினது ஐம்பது சதவீதம் வரையில் நிதிகளைப் பயன்படுத்துவதன்மூலம் அட்டவணையின் இப்பாகத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட நோக்கங்களுக்காக முதலீடுகளைச் செய்வதற்குத் தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளரொருவர் அனுமதிக்கப்படலாம்.

11. கூட்டிணைப்பு உத்தரவாதமும் பங்குகளை அடைமானம் வைத்தலும்:

(1) சொல்லப்பட்ட முதலீடு பெறுநரிலான முதலீடு, நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகச் செய்யப்பட்டிருப்பின் மற்றும் கம்பெனியின் நிதிசார் வலிமையானது கூட்டிணைப்பு உத்தரவாதத்தின் பொறுப்பை ஏற்பதற்குப் போதியதாகவிருப்பின், சொல்லப்பட்ட முதலீட்டாளர் பங்குதாரராகவிருக்கின்ற இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றின் சார்பில் (அதாவது முதலீடு பெறுநர்), நிதி நிறுவனமொன்றிலிருந்து வசதிகளைத் திரட்டுவதனை அல்லது முதலீடு பெறுநரினால் பொறுப்பேற்கப்பட்ட ஒப்பந்தமொன்றை வசதிப்படுத்துவதனை முதலீடு பெறுநருக்கு இயலச்செய்வதற்கு இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பெனி (முதலீட்டாளர்) கூட்டிணைப்பு உத்தரவாதமொன்றை வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படும் பட்சத்தில், 1,000,000 ஐஅடொலர் என்ற அதிகபட்ச எல்லைக்கமைவாகக் கூட்டிணைப்பு உத்தரவாதமொன்று வழங்கப்படலாம். கூட்டிணைப்பு உத்தரவாதத்திலிருந்து எழுகின்ற ஏதேனும் எதிர்பாராத பொறுப்பை எதிர்கொள்வதற்கு கம்பெனிக்கு நிதிசார் வலிமை உள்ளதனைக் கம்பெனியின் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துதல் வேண்டும். உத்தரவாதப் பெறுமதி, மேற்படி அனுமதியின்கீழ் வழங்கப்பட்ட (கூட்டிணைப்பு உத்தரவாதத்தினதும் இயைபான சபைத் தீர்மானங்களினதும் பிரதிகளுட்பட) அத்தகைய ஒவ்வொரு கூட்டிணைப்பு உத்தரவாதத்தினதும் விபரங்களைச் சொல்லப்பட்ட உத்தரவாதம் பயனுறும் திகதியிலிருந்து 14 நாட்களினுள் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவருக்குக் கொடுத்துதவுவதற்கு முதலீட்டாளர் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் கொடுக்கப்பட்ட நேரத்தில் சொல்லப்பட்ட முதலீடுபெறுநரில் முதலீட்டாளருக்குள்ள நூற்று வீதப் பங்கு வைத்திருக்கைக்கு விகிதாசாரமானதாகவிருத்தல் வேண்டும்.

(2) சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, மேலே (1) ஆம் உப்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட உத்தரவாதங்கள் தொடர்பில் செல்லுபடியான உரிமைக்கோரிக்கைகளிலிருந்து எழுகின்ற வெளித்திரும்பல் அனுப்புதொகைகளைச் செய்வதற்கும் ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அனுமதிக்கப்படுகின்றது அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி அனுமதிக்கப்படுகின்றார்.

(3) இவ்வொழுங்குவிதிகளில் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளில் அனுமதிக்கப்பட்டவாறு வதிவுள்ள முதலீட்டாளரினால் முதலீடுபெறுநரில் கொள்ளப்பட்ட பங்குகள், ஒரு நிதிநிறுவனத்திடமிருந்து முதலீடுபெறுநரினால் பெறப்படவேண்டிய வசதிகளுக்குப் பிணைப்பொறுப்பளிப்பதற்கு அல்லது முதலீடுபெறுநரினால் பொறுப்பேற்கப்பட்ட ஒப்பந்தத்தை வசதிப்படுத்துவதற்கு, ஒரு சோந்தையாக இடப்படலாம். சோந்தையானது முதலீடுபெறுநரில் வதிவுள்ள முதலீட்டாளரினால் வைத்திருக்கப்பட்ட பங்குவைத்திருக்கையின் அக்கறைக்கு விகிதாசாரமானதாகவிருத்தல் வேண்டும்.

(4) மேலே (1)ஆம், (3)ஆம் உட்பந்திகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட உத்தரவாதத்துக்கு அல்லது சோந்தைக்குப் பின்வரும் நிபந்தனைகளும் பயனுறுத்தப்படுகின்றன:-

(அ) ஒரு வதிவுள்ள முதலீட்டாளர், கூட்டிணைப்பு உத்தரவாதத்தை வழங்குமுன்னர் அல்லது சோந்தையைச் செய்து கொள்ளு முன்னர் (தவணை தவறுகையின் பட்சத்தில்) உரிமைக்கோரிக்கையின் பெறுமதியை அறவிடுவதற்கு முதலீடு பெறுநருடன் தோதான சட்ட உடன்படிக்கையைச் செய்தல் வேண்டும்;

(ஆ) ஒரு செல்லுபடியான உரிமைக் கோரிக்கை செய்யப்படும் பட்சத்தில், உரிமைக்கோரிக்கையின் அதிகபட்ச எல்லை, வசதியின் நிலுவையாகவுள்ள கடப்பாடுகளுக்கு விகிதாசாரமாக அல்லது அதற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்;

(இ) மேலே (அ) என்னும் விடயத்தில் கூறப்பட்டவாறான அத்தகைய அறவீடுகள், முதலீடு எந்த வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்டதோ அதே வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினுட் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

12. ஏனைய நியதி நிபந்தனைகள் :

(1) தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளரொருவர், ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினூடாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினூடாக அட்டவணையின் இப்பாகத்தின் பட்டியல் I இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட முதலீடுகளுக்காக ஒவ்வொரு வெளித்திரும்பல் அனுப்புகைக்கு முன்னரும் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தலைவரிடமிருந்து அனுமதிப்புக் கடிதமொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அடுத்துப்பின்னரான வெளிநாட்டு முதலீடுகளைச் செய்வதற்கு உட்கருதுகின்ற எவரேனும் தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவருக்கு, ஆதாரப்படுத்துகின்ற ஆவணங்களுடன் சேர்த்து, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பொது அனுமதியின் நியதிகளின்படி அத்தகைய தகவுடைய முதலீட்டாளரினால் செய்யப்பட்ட முன்னைய முதலீடுகளின் முன்னேற்றமும் நிலைமையும் பற்றி, இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் இணை உறுப்பினரொருவரிடமிருந்து அல்லது பட்டயம்பெற்ற நிதிசார் பகுப்பாய்வாளர் (சீஎவ்ஏ நிறுவகத்தின்) பட்டயம் வைத்திருப்பவரொருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும். வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தலைவர், அத்தகைய தகவுடைய முதலீட்டாளரினாற் செய்யப்பட்ட சொல்லப்பட்ட முன்னைய முதலீடுகளின் முன்னேற்றம்பற்றித் திருப்திப்படுவதன் மேலும் அட்டவணையின் இப்பாகத்தின் 3 ஆம் பந்திக்கமையவும் சொல்லப்பட்ட அனுமதிப்புக் கடிதத்தை வழங்குதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் இலங்கைக்கு வெளியேயுள்ள நிரற்படுத்தப்படாத கம்பெனியொன்றில் அனுமதிக்கப்பட்ட முதலீடொன்றைச் செய்துள்ள முதலீட்டாளர் கம்பெனியின் பணிப்பாளர்சபை, அத்தகைய முதலீட்டின் முன்னேற்றத்தை வருடாந்தம் மதிப்பீடுசெய்தல் வேண்டுமென்பதுடன் முதலீடு பெறுநரின் இலாபம் அல்லது நட்டம், முதலீடுபெறுநரினால் வெளிப்படுத்தப்பட்ட பங்கிலாபம் அல்லது முதலீடுபெறுநரினாலான பங்கிலாபங்களின் பெறுகை பற்றிய விபரங்களுட்பட அதுபற்றிய அறிக்கையொன்றை வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவருக்கு, முறையான அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கான அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கான பிரதியொன்றுடன், அடுத்துவரும் ஆண்டின் மார்ச்சு 31 ஆந் திகதியன்று அல்லது ஒரு குறிப்பிட்ட முதலீடு தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(3) (தனியாட்கள் நீங்கலாக) தகவுடைய முதலீட்டாளர் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட முதலீட்டைச் செய்வதற்குத் தகவுடையவராகவிருப்பதற்கு, கடந்த மூன்றாண்டுகளுக்காக உறுதியான நிதிநிலைமையையும் செயல்நிறைவேற்றுகையையும் பேணியிருத்தல் வேண்டும். தகவுடைய முதலீட்டாளர், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, கடல்கடந்த நாடுகளில் ஒழுங்குபடுத்தப்பட்ட பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையிலான அனுமதிக்கப்பட்ட முதலீடுகள் நீங்கலாக, மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மற்றும் உத்தேசிக்கப்பட்ட முதலீட்டின் சாத்தியத்தன்மை தொடர்பான விதப்புரையொன்றைப் பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் இணையுறுப்பினரொருவரிடமிருந்து அல்லது பட்டயம்பெற்ற நிதிசார் பகுப்பாய்வு நிறுவகத்தின் பட்டயம் வைத்திருப்பவரொருவரிடமிருந்து ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு வழங்குதல் வேண்டும்.

பாகம் II

சட்டம் நடைமுறைக்கு வருமுன்னர் வழங்கப்பட்டிருந்த (பொதுவான அல்லது விசேடமான) ஏதேனும் அங்கீகாரத்தின்கீழ் பொறுப்பேற்கப்பட்டனவும் இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களைப் பொருளளவில் ஒத்திருக்கின்றனவுமான ஏலவேயுள்ள எல்லா மூலதனக் கொடுக்கல்வாங்கல்களும் இவ்வொழுங்குவிதிகளினால் அல்லது எவையேனும் அடுத்துப்பின்னரான ஒழுங்குவிதிகளினால் குறிப்பானமுறையில் வேறுபடுத்தப்பட்டாலொழிய அத்தகைய அங்கீகாரத்தின்கீழ் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்காகக் குறித்துரைக்கப்பட்ட நியதிநிபந்தனைகளுக்கமைய தொடர்ந்து நடாத்தப்படலாம்.

பாகம் III

கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அதிகாரம்

1. வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள்

ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, சட்டத்தின் ஏற்பாடுளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கமைய, இவ்வொழுங்கு விதிகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களைக் கையாள்வதற்குப் பின்வரும் தகவுடைய ஆட்களின் பெயரில் வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரங்கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்டவொரு கம்பெனி தவிர 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகள்;

(ஆ) ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி;

(இ) (மேலே (அ) மற்றும் (ஆ) என்பவற்றின்கீழ் தகவுள்ள முதலீட்டாளர்கள் நீங்கலாக) மத்திய வங்கி, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அல்லது இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின்கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லது உரிமமளிக்கப்பட்ட உருவகங்கள்;

(ஈ) 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியம் அல்லது தொழில் ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் சகாய நிதியம்;

(உ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்டவொரு பங்காண்மை; அத்துடன்

(ஊ) (ஏற்புடையதற்பாலவாறு) இலங்கையில் வதிகின்ற தனியாள் அல்லது அத்தகைய தனியாளினால் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட தனியுரிமையாண்மை.

2. ஏனைய நியதி நிபந்தனைகள்

(1) வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான கட்டளைக்கற்களும் அத்தகைய கணக்குக்காக அனுமதிக்கப்பட்ட பற்றுகளும் வரவுகளும், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட இயைபான பணிப்புகளில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(2) ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி, இப்பாகத்தின் பந்தி I இல் குறித்துரைக்கப்பட்ட வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் நாடுகின்ற ஆட்கள், சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட இயைபான பணிப்புகளிற் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகளின்கீழ் அத்தகைய கணக்கைத் திறந்து பேணுவதற்குத் தகவுடையவர்களா என்பதை நிச்சயிப்பதற்கு உரிய விழிப்புக்கவனத்தையும் நியாயமான கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும். ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும், கணக்கைப் பேணும்போதும் அத்தகைய கணக்குகளை மூடியபின்னர் ஆறாண்டுகளுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்காகவும் அவர்களின் தகவுடைமைபற்றிய எண்பிப்பாகக் கணக்குவைத்திருப்போர் தொடர்பான தகவல்களையும் ஆவணமுறையான சான்றையும் பேணுதல் வேண்டும்.

02-377

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.